வருடாந்த ஆண்டறிக்கை

1998

தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை
(நாரா)
காக்கை தீவு, மட்டக்குளிய, கொழும்பு 15.

உள்ளடக்கம்

பக்கம்

1. கடல்சார் உயிரியல் வளப் பிரிவு. 05
2. உள்ளூர் நீரியல் வளங்களும், நீரியல் மீன்கள், தாவரங்கள் வளர்க்கும் பிரிவும். 09
3. மீன்பிடித் தொழிநுட்பப் பிரிவு. 17
4. சமுத்திரவியல் பிரிவு 18
5. தேசிய நீர் நிலையவியல் பிரிவு. 20
6. சமூக – பொருளியல் மற்றும் சந்தை ஆராய்ச்சிப் பிரிவு. 22
7. அறுவடையின் பின்னான தொழிநுட்பவியல் பிரிவு. 24
8. சுற்றாடல் ஆய்வுப் பிரிவு. 33
9. நூலகம் மற்றும் தகவல் பிரிவு. 36
10. நிருவாகப் பிரிவு. 38
11. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை. 45

கடல்சார் உயிரியல்வளப் பிரிவு

நிகழ்ச்சித் திட்டம் 1. கடற்றொழில் மூலவளங்களின் மதிப்பீடும் முகாமைத்துவமும்.

தலைப்பு: இலங்கையில் பாரிய கடல்வாழ் கடற்றொழிலைக் கண்காணிப்பதும், அளவீடு செய்வதும்.

செயற்பாடு: 1. நிகழ்வுக் குறிப்பேட்டுத் தகவல் மூலமாக கரையிலிருந்து சற்றுத் தூரத்திலான பலநாள் மீன்பிடியைக் கண்காணித்தல்.

விளைவுகள்: காண்புகளும் வெளிப்பாடுகளும்.

- கரையிலிருந்து சற்றுத் தூரத்திலான பலநாள் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் தொகுதியினரின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 1700 ஆகும். அவர்கள் கடந்த இரண்டு ஆண்டு காலங்களின் போதும் ஆண்டொன்றுக்கு 65,000 தொடக்கம் 70,000 தொன் வரையான மற்றும் கடல்வாழ் மீன்களையும் பிடித்துள்ளனர்.

- பலநாள் மீன்பிடி வள்ளங்களில் 67% க்கும் கூடுதலானவை இலங்கையின் அப்பால் மீன்பிடி நடவடிக்கைகளை நடாத்துவது அதாவது ஒன்றில் சருவதேசக் கடல் பிரதேசத்தில் அல்லது அயல் நாடுகளின் கடல் பிரதேசத்தில் (சோமாலியா, சோசெல்ஸ், வங்காள தேசம், அந்தமான் தீவுகள், சொகோஸ் தீவுகள் மற்றும் இந்தியா) மீன்பிடிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

- மாலைதீவுக்கும் இந்தியாவுக்கும் ஊடாக (லக்கத்தில் மற்றும் மினிகோயி தீவுகளுக்குள்) கடல் வழிப் பிரயாணம் செய்வதற்கான கடல் மார்க்கம் இல்லாதது தமது மீன்பிடித் தளத்தைச் சென்றடைவதற்கான பிரதான தடையாக உள்ளதாக இனம் காணப்பட்டுள்ளது. பிரதானமாக இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் அதிகரித்த அளவிலான கண்காணிப்பின் காரணமாக அவர்களின் கடல் பிராந்தியத்தைத் தவிர்த்து மீன்பிடித் தளங்களைச் சென்றடைவதற்கு மேலதிகமாக ஆறு அல்லது ஏழு நாட்கள் பயணம் செய்ய வேண்டியுள்ளது. நடவடிக்கை 2. பாரிய கடல் மீன்பிடியைக் கண்காணித்தல்.

- 1998 இல் பாரிய கடல் மீன் உற்பத்தியின் ஆண்டுக்கான மொத்தம் 114,544 தொன் ஆகும்.

- கரையோர மீன்பிடியைப் பொறுத்த மட்டில் 1997 ஆம் ஆண்டிலும் பார்க்க 1998 இல் 26% உற்பத்தி அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இதே வேளை இதே காலப்பகுதியில் கடற்கரையில் இருந்து தூரத்தில் இடம்பெற்ற மீன் உற்பத்தி 9% த்தால் வீழ்ச்சி அடைந்தது.

- பல நாள் தொடர்ந்து மீன் பிடிக்கும் வள்ளங்களில் மேலதிக உபகரணமாக வட்ட வடிவாக வலை கடந்த ஆண்டுகளில் மிகவும் பிரபல்யம் பெற்றது. இதன்படி 1997 இல் அறிக்கை இடப்பட்டதிலும் பார்க்க 1998 ஆம் ஆண்டுக்காலத்தின் போது சிறிய ரியூனா மீன் வர்க்கங்களில் அதிகரித்த உற்பத்திக்குத் தூண்டுதலாய் இருக்கலாம்.

- சிறிய ரியூனா மூலவளங்களின் பகுத்தறிவான விதத்தில் உபயோகிப்பதற்கும் சிறந்த முகாமைத்துவத்துக்கான முகாமைத்துவ உபாயங்களை அபிவிருத்தி செய்வதற்கென கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சுக்கு வட்ட மீன்பிடி வலையைப் பற்றிய தகவல் தரப்பட்டுள்ளது.

- தினக்குறிப்பேட்டு நிகழ்ச்சித் திட்டத்துடன் கூட்டாக ஐ. ஓ. ரி. சி. க்கு பாரிய கடல்சார் மீன்பிடி தொடர்பில் பிரதேச மட்டத்தில் பாரிய கடல்சார் மூலவளங்களை முகாமைப்படுத்துவது தொடர்பில் தகவல் தரப்பட்டுள்ளது.

தலைப்பு: இலங்கையில் சிறிய கடல்சார் மீன்பிடியை மதிப்பிடுதல்.

வள்ளம் ஒன்று ஒரு முறை தொழிலுக்குச் சென்று வந்த போதான சராசரி ஆண்டு மீன்பிடி நீர்கொழும்பு 66.6 கி. கி. எப். ஆர். பி. எனவும், அதற்கடுத்ததாகக் களுத்துறையில் 45.9 கி.கி உம் மாத்தறையில் 42.9 கி.கி. உம் ஒவ்வொரு வள்ள்த்திற்கும் ஒவ்வொரு பயணத்தின் போதும் கிடைப்பதாகப் பதியப்பட்டுள்ளது. ஆகக் குறைந்த அளவில் ஒரு பயணத்தில் வள்ளம் ஒன்றுக்கு கிடைப்பது தங்காலையில் 17.03 கி. கி. எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எல்லாப் பிரதேசங்களையும் நினைத்துப் பார்க்குமிடத்து ஆண்டுக்கான சராசரியாக வள்ளப் பயணத்துக்கான சராசரி 50.69 கி. கி. (இயந்திரம் பூட்டிய மரபு முறையான கல்முனைப் படகுகள் நீங்கலாக) ஆகவும் ஒவ்வொரு வள்ளப் பயணத்துக்கும் 44.2 கி. கி. (கல்முனை இயந்திர மரபு வழி வள்ளங்கள் உட்பட) ஆகவும் இருந்தது.

இயந்திரமயமாக்கப்படாத மரபு வழி வள்ளங்கள் ஒவ்வொன்றிலும் பிடிப்பு வீதம் ஒவ்வொரு வள்ளத்துக்கும் 22.2 கி. கி. கல்முனையில் இருந்து அதி உயர்வாகப் பதிவு செய்யப்பட்ட அதே வேளை பேருவளை, தங்காலை மற்றும் மாத்தறையில் இருந்து முறையே ஒவ்வொரு வள்ளப் பயணத்துக்கும் 7.7 கி.கி, 6.2 கி.கி மற்றும் 5.6 கி.கி. எனப் பதியப்பட்டுள்ளது. எல்லாப் பிர்தேசத்துக்குமான சராசரி ஒவ்வொரு வள்ளப் பயணத்துக்கும் 9.13 கி.கி. என மதிப்பிடப்பட்டுள்ளது. 1983-1998 ஆம் காலப் பகுதியில் பேருவளை, தங்காலை, மாத்தறைப் பகுதிகளில் ஒவ்வொரு வள்ளப் பயணத்துக்குமான சராசரி மீன்பிடி வீதம் முறையே 11.3, 9.67 மற்றும் 7.23 கி. கி. என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த கலைச் சாதன இணைப்புக்கு கிடைக்கக் கூடியதான மீனின் அளவு கடந்த 15 ஆண்டுகளில் குறைந்து சென்றுள்ள போக்கைக் காட்டுகின்றது.

நடவடிக்கை - 3 மிற்றோ கொன்றியல் டி. என். ஏ. யை உபயோகித்து அம்பிக்காஸ்ரர் சேர்ம் எண்ணிக்கையில் பகுப்பாய்வு:-

நீர்கொழும்பு (என்-24) பேருவளை (என் - 18) தங்காலை (என் - 35) மட்டக்களப்பு (என் - 9) ஆகிய 9 இடங்களின் மாதிரிகளின் பகுப்பாய்வு செய்யப்பட்டவிடத்து ஒவ்வொரு மட்டுப்படுத்தப்பட்ட தொகுப்புகளின் பட்டை இடும் மாதிரிகளில் எதுவித வேறுபாட்டையும் காணவில்லை. இதன்படி ஒரே தாய் மரபு கூறைச் சேர்ந்தவை. வேறுபட்ட கரையோரப் பகுதிகளில் இருக்கும் இடத்து அங்கு எண்ணிக்கையில் வேறுபாடுகள் இருப்பதற்கான வாய்ப்புள்ளதைக் காட்டுகின்றது.

மேலுள்ள காண்பு சரியானதா என்பதைக் கண்டறியும் நோக்கில் விரிவான பகுதிகளின் வரிசை முறைகளை ஆராய்வதற்கென ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

தலைப்பு: இலங்கையின் மேற்கு தெற்கு மற்றும் கிழக்கு கரையோரங்களில் "டிமேசல்" கடற்றொழிலை அளவைமிடுவதும் கண்காணிப்பும்:

★ வடமேல் மற்றும் தென் பிரதேசங்களில் பலநாள் மீன்பிடி நடவடிக்கை முயற்சிகள் அதிகரித்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக் காலம் முழுவதும் 12 வள்ளங்கள் டிமேசல் மீன்பிடிக்கும் 14 நடவடிக்கைகளை நடாத்தியுள்ளதன் மேலும் 50 - 60 வள்ளங்கள் சனவரி தொடக்கம் ஏப்பிரல் வரையான பருவ காலத்தில் ஈடுபட்டன. இவற்றுள் சில இலங்கையின் இ. இ. இசட். க்கு வெளியால் டிமேசலைத் தேடி நீண்ட பயணங்களை மேற்கொண்டன.

★ பலநாள் மீன்பிடி பிரதானமாக கோலில்லாத கைத்தூண்டிலால் வெளிச்சத்தால் இரவில் கவர்ந்து அல்லது அதில் இல்லாது பகலிலும் அல்லது இரண்டு வேளையிலும் நடாத்தப்படுகின்றன.

★ வடமேற்கு பிரதேசத்தில் அரை டிமேசல் பெரிய கறங்கிட்சைப் பிடிப்பதற்கென ஒரு செங்குத்தான நீண்ட தூண்டிற் கயிறு புதிதாக வடிவமைக்கப்பட்டது.

★ கரையோரப் பகுதிகளில் சிறிய வள்ளங்களாலான மீன்பிடி முயற்சிகள் ஆண்டு முழுவதும் எதுவித மாற்றமும் இல்லாமல் இருந்ததுடன் நீர்கொழும்பு, சிலாபம், கல்பிட்டி மற்றும் அம்பாந்தோட்டைப் பகுதிகளில் உள்ளது போன்ற சில பிரதேசங்களிலேயே அடர்ந்து காணப்பட்டது.

தலைப்பு: சிலாபத்தில் இறால் கடற்றொழில் பற்றிய உயிரியற் பொருளியல் ஆய்வு.

★ வாவிக்குள் இறால் குஞ்சு மீன் பிடியில் ஈடுபட்டுள்ள பெரிய உபகரணங்களின் மதிப்பிட்டுள்ள சராசரி பிடிப்பு வீதம் (தடை வலை மற்றும் செவுள் வலை) முறையே கலம் / நாள் / 2.28 கி. கி. ஆகவும் கலம் / நாள் / 5.56 ஆகவும் இருந்தது. சிலாபத்தில் உள்ள வாவியின் ஆண்டுக்கான உற்பத்தி 14.06 மெட்ரிக் தொன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

★ சிலாபத்திற்கப்பால் உள்ள ஆழமற்ற கரையோரப் பகுதியில் இறால் குஞ்சு கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள பெரிய கலன்கள் பிடிக்கும் மதிப்பிடப்பட்டுள்ள சராசரி வீதங்கள் (தடைவலை மற்றும் செவுள் வலை) முறையே கலம் / நாள் 6.68 கி. கி. மற்றும் கலம் / நாள் 8.26 கி. கி. ஆகும். சிலாபத்திற்கப்பால் உள்ள ஆழமற்ற கடற்கரையோரங்களில் மரபு வழி இறால் குஞ்சு ஆண்டு உற்பத்தி கிட்டத்தட்ட 72 மெட்ரிக் தொன்களென மதிப்பிடப்பட்டுள்ளது.

★ சிலாப வாவியின் மொத்த உற்பத்தியின் நிறை வாரியாக சராசரியாக இறால் குஞ்சுகள் கிட்டத்தட்ட 13% ஆக உள்ளது. பாரிய பங்களிப்பு பெனியஸ் இன்டிகஸ் பெனியஸ் மொ எனா டொன் பெனியஸ் செமிசுல்காட்டஸ் மற்றும் பெனியஸ் மேர்குயியென்சிஸ் என்பவற்றிலிருந்து கிடைத்தது. இதற்கும் மேலாகப் பூனை மீன்கள் சேற்று நண்டு கெழுத்து மீன்கள் என்பனவும் வாவியின் மொத்த உற்பத்திக்கு கிட்டத்தட்ட 56% த்தை வழங்கி உதவியது.

தலைப்பு: இலங்கையின் மேற்கு மற்றும் தெற்குக் கரையோரங்களில் வாவி/கழிமுக மீன்பிடியைக் கண்காணித்தல்.

வாவியில் மீன் பிடித்தல் கிட்டத்தட்ட 25 மீன்பிடி முறைகளை உள்ளடக்குகின்றதுடன் 1200 கலன்கள், 10,000 கடற்றொழிலாளர் மற்றும் 66 பெரிய சிறிய தரையிறங்கும் நிலைகளையும் கொண்டுள்ளது. மீன் மற்றும் இறால்களுக்கான தடைவலை முறையே வாவி முழுவதிலும் முதன்மையாயிருந்தது.

வாவியில் இறால் மற்றும் மீன் என்பவற்றின் ஆண்டு உற்பத்தி முறையே 750 தொன் மற்றும் 1500 தொன்களாகவும் இருந்தது.

நிகழ்ச்சித் திட்டம் - 2: கடல்வாழ் பாலூட்டிகள், மற்றும் ஆமைகள் மற்றும் உயிரினங்களிலான ஆய்வுகள்.

தலைப்பு: கடல் ஆமைகள், டெமோசலிஸ், கொயிளசெஸ் போன்றவை எந்தளவு நேர இடைவெளியில் குட்டி போடுவதற்கு வருகின்றன என்பது பற்றிய ஆய்வும் உசன்கொடை கடற்கரையில் (அம்பாந்தோட்டை மாவட்டம்) முன்னைய இடத்தில் கூட்டைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தைத் தவிர்ப்பதும்.

எல்லா இனங்களுக்குமான குட்டி போடுவதற்கு வரும் இடைவெளி மாதம் ஒன்றுக்கு 10 தரமாகும். இதில் மொத்த எண்ணிக்கையில் அரைவாசி லோஹர்ஹெட் ஆமைகளானவை ஆகும். (60 கூடுகள்)

வளர்ச்சி வீதம் மதிப்பீடு:

ஒலிவ் றிட்லி லெப்பிடோ செலிஸ் ஒலிவேசியே பிறந்து ஒரு ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 1.3 செ.மீ. ஆண்டொன்றுக்கு 15.6 செ.மீ. ஆகும்.

லொல்கர்ஹெட் கரெற்றாகறெற்றலின் வளர்ச்சி வீதம் பிறந்த முதல் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 1.9 செ.மீ. ஆண்டொன்றுக்கு 22.8 செ. மீ. ஆகும்.

லொகர்ஹகரெற்றா கறெற்றாவின் வளர்ச்சி பிறந்து மூன்று ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 1.00 செ.மீ. ஆண்டொன்றுக்கு 12 செ.மீ. ஆகும்.

வெளியீடுகள்:-

அமரசூரியா டி (1998) ஆமை குஞ்சு பொரிக்கும் இடங்கள் இலங்கையின் ஆமை உயிரினத்துக்கு நன்மையா பேரழிவா இலங்கை கடற்றொழில் நீரியல் வள சங்கத்தின் 4 ஆம் ஆண்டு விஞ்ஞான அமர்வுகள். ஜயவர்த்தனா பி.ஏ.ரி.ரி. உம் டி. எஸ். ஜயக்கொடியும் (1998) இலங்கையில் சிலாபத்திற்கு

அப்பால் உள்ள ஆழமற்ற கரையோரக் கடலில் சிறிய கண் ஆட்டிசனல் செவிள் வலை மீன்பிடியில் சில ஆய்வுகள் இலங்கை நீரியல் விஞ்ஞான சஞ்சிகை 03 (1998) : 27 - 4.

ஜயவர்த்தனா பி.ஏ.ரி.ரி. யும் தயாரத்தினாவும் (1998) இலங்கையில் கந்தக்குழிக்கப்பால் பறக்கும் மீன் கடற்றொழில் பற்றிய ஒரு ஆரம்பப் பகுப்பாய்வு இ. வி. சஞ் (உயிரியல் விஞ்) பாகம் - 26.

ஜயவர்த்தனா பி.ஏ.ரி.ரி. யும் பி. தயாரத்தினாவும் (1998) முறுமூக்கன் யோனி மீனின் லெயிஒக்நாதஸ் பிறேவிக்கோற்றிஸ் (வலன்சியென்னெஸ்) எண்ணிக்கை இயல்பு. இலங்கை புத்தளம் கழிமுகத்தின் போத்துக் கல்குடாவிலிருந்து ஆசிய கடற்றொழில் விஞ்ஞானம் 10 (1998) 241-250.

ஜயவர்த்தனா பி.ஏ.ரி.ரி. யும் பி. தயாரத்தினாவும் (1998) இலங்கை புத்தளம் கழிமுகத்தின் போத்துக்கல் குடாவின் முறுமூக்கன் யோனிமீன் லொயிஒக்நாதஸ் பிறெவிக்கொற்றிஸ் (வலன்சியென்னெஸ்) மீனினம் இனப்பெருக்க உயிரியல் ஆசிய கடற்றொழில் விஞ்ஞானம் 10 (1998) 189-200.

ஜயவர்த்தனா, பி.ஏ.ரி.ரி. யும் பி. தயாரத்தினாவும் (1998) இலங்கையில் வடமேல் கரையோரம் அமைந்துள்ள போத்துக்கல் குடாவின் கரைவலை மீன்பிடியிலான சில ஆய்வுகள் இ. விஞ். ச. (உ.விஞ்) பாகம் - 26.

ஒமன் எம். சி., ஏ. இராஜசூரியா மற்றும் எஸ். சுவென்சன் (1998) வாழிட அமைப்பு மற்றும் மனித கழப்ப உயிரியல் சுட்டிகளாக வண்ணத்துப்பூச்சி மீனை உபயோகித்தல் (சீற்றொடொன்ரிடே) மனித சுற்றாடல் சஞ்சிகைத் தொகுதி XXVII பக்கங்கள் 708-716.

இராஜசூரிய ஏ யும் த சில்வா எம். டபிள்யூ. ஆர். என். னும் 1998 இலங்கையின் மேற்கு, தென்மேற்கு மற்றும் தெற்கு கரையோர ஓரமாயுள்ள பாறைகளின் பவளக் கற்கள், 6 ஆவது சர்வதேச பவளக் கற்பாறை ஆய்வரங்கு நிகழ்வுகள்.

இராஜசூரியா ஏ யும் ஏ. ரி. வைற்றும் 1998 தெற்காசியாவில் பவளப் பாறைகளின் நிலை சி. ஆர். விஸ்கின்றனில் (பதிப்) உலகில் பவளப் பாறைகளின் நிலைமை: 1988 அவுஸ்திரேலிய சமுத்திரம் சார் விஞ்ஞான நிறுவனம், 184 பக்.

இராஜசூரிய ஏ மனிக்கு எம். எச். சுப்பிரமணியம் பீ. ஆர். மற்றும் ரூபென்ஸ் 1998. தெற்காசியாவில் பவளக் கற்பாறை வாழ்க்கைச் சூழல் முறைகளைப் பாதுகாத்து ஆதரிக்கும் அபிவிருத்திக்கான முகாமைத்துவ நடவடிக்கைகளைச் செயல்முறைப்படுத்தும் முன்னேற்றத்திலான ஒரு மீளாய்வு. 1998 நவம்பர் 23-26 டவுன்ஸ்யிலே அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச வர்த்தக வலய சமுத்திர வாழ்க்கைச் சூழல் முகாமைத்துவ ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.

இராஜசூரிய, ஏ. ஒமன் எம். சி. யும் ஜோண்ஸ்ரன் ஆர். உம் 1998. இலங்கையின் வடமேல் பாகத்தில் உள்ள பவள மற்றும் மணற்கற்பாறை வாழ்க்கைச் சூழல்கள். கற்பாறைத் தொகுதிகளின் பரம்பல் நீர் உயிரியல் 362: 31-42.

இராஜசூரிய, ஏ. ஒமன், எம். சி யும் சுவென்சூன் எஸ். சும் 1998. தென் இலங்கையில் பவள மற்றும் பாறைக்கல் வாழ்க்கைச் சூழல். பாறைத் தொகுதிகளின் பரம்பலிலான போக்கு அம்பியோ தொகுதி 27 இல் 8. பக்கங்கள் 723-728.

உள்ளூர் நீரியல் வளங்களும் நீரியல் மீன் தாவரம் வளர்க்கும் பிரிவும்

நிகழ்ச்சித் திட்டம் - 1: இறால் குஞ்சு / இறால் வேளாண்மையும் மூலவளங்கள் முகாமைத்துவமும்.

கருத்திட்டத் தலைப்பு: புழு வளர்ப்பு மற்றும் இராட்சத நன்னீர் இறால் மக்குறோபுறோசியம் றொசன்மேர்கிவிவயைம.

வெளியில் பெறப்பட்ட தாய் இறால்களில் பக்றீறியா நோய்களுக்கான அறிகுறி காணப்பட்டது. குஞ்சுபொரிக்கும் நீர்த் தொட்டில்களில் அவை விடப்படும் முன் அவற்றுக்கு வைத்தியம் பார்க்கப்பட்ட போதும் புழுக்களில் உடல் நலம் இதன் மூலம் பாதிக்கப்பட்டதாகத் தோன்றுகின்றது. முதலாவது புழு நிலையில் முட்டையில் இருந்து பெறப்பட்டவற்றில் 90% பொரித்து அநேகமான பரீட்சார்த்திகளின் போது 4 ஆவது புழு நிலை வரையும் அவை உயிர் வாழ்ந்தன.

பச்சை நீர்த் தொழிநுட்பத்தை உபயோகித்து நடாத்தப்பட்ட பரிசோதனையின் போது புழு நிலையின் பின்னும் அவை உயிர்வாழ்ந்தன. ஆனால், உயிர்வாழும் வீதம் மிகக் குறைந்த அளவில் இருந்தது. (0.02%) உயிர்வாழும் வீதத்தை மேம்படுத்துவதற்கான நிவாரண நடவடிக்கைகள் விரைவாகப் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

வளர்ச்சியில் உப்புத் தன்மை கொண்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் வெள்ளைப் புள்ளிகளை ஆபத்தும் பிற நோய்கள் ஏற்படக் கூடியதான வாய்ப்புகள் அர்த்தமற்றவையாக்கப்பட்டன.

35 பி. பி. ரி க்கு மேற்பட்ட உப்பு நீர்மட்டத்துக்கு மேல் வளர்க்கப்பட்ட இறால் குஞ்சுகளைப் பல்வேறு நோய் அறிகுறிகள் நிகழ்வுகளைத் தீர்மானிப்பதற்கான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த அறிகுறிகள் மட்டில் உப்புத் தன்மை கொண்டுள்ள தொடர்பு பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அதியுயர் உப்புத் தன்மையின் கீழான நிலைமைகளில் வளர்ச்சி தடைப்பட்டதாயினும் அதியுயர் உப்புத் தன்மை கொண்ட நீரில் வளர்ந்த இறால் குஞ்சுகளின் வளர்ச்சியிலும் சாதாரண உப்புத் தன்மை கொண்ட நீரில் வளர்க்கப்பட்ட இறால் குஞ்சுகளுக்கும் இடையே காண்பட்ட வளர்ச்சியில் குறிப்பிடத்தக்களவு வேறுபாடு காணப்படவில்லை. வெண்புள்ளி தென்படுவதில் குறிப்பிடத்தக்களவு வேறுபாடு காணப்பட்டது. ஆனால், உயர் உப்புத் தன்மை கொண்ட நிலைமைகளில் இது குறைவானதாகும். பிளாக்கில்ஸ் நோய் ஏற்படும் வாய்ப்புக்கும் உப்புத் தன்மைக்கும் சாதகமான தொடர்பைக் காட்டியதுடன் உப்பு மட்டங்களுக்கு மேல் இன அழிவை ஏற்படுத்தியது. அவதானிக்கப்பட்ட பிற பொதுவான அறிகுறிகளாவன: அளவில் சமன்பாடின்மை, வால் அழுகுதல், வெறுக்கத்தக்க உயிரினங்கள் காணப்படுதல் மற்றும் ஒத்திருக்கும் ஒட்டுண்ணிகள், ஓட்டில் சிதைவுகளும் கறுத்தப் புள்ளிகள் போன்றவையும் பொதுவாகக் காணப்படும் அறிகுறிகள் ஆகும். இந்த அறிகுறிகளுக்கும் உப்புத் தன்மைக்கும் எவ்விதத்திலும் குறிப்பிடத்தக்களவு தொடர்பு இருக்கவில்லை.

அரை ஊக்குவிப்புடன் கூடிய இறால் குஞ்சு வளர்ப்பில் அரைவாசி மூடிய மற்றும் முழுதாக நீர் முகாமைத்துவ முறைகளில் முழுதாக மீள ஓடுதல் மூலம் இதனால் குஞ்சுகளின் சுகாதாரம் மற்றும் பண்ணைச் செயற்பாடுகள் என்பன ஆராயப்பட்டன.

பற்றீரியா சார்ந்த மற்றும் எக்ரோபறசைற்றிக் நோய்ப் பாதுகாப்பு தொடர்பிலான அறிகுறிகளை அடக்குவதில் மீள மதிப்பீடு முறைமை மிகவும் பயனுறுதி கொண்டதாகக் கண்டு கொள்ளப்பட்டது. நேரடி மாற்று முறையுடன் ஒப்பிடுமிடத்து மேற்சொன்ன அறிகுறிகளை அடக்குவதற்கு உள்வரும் நீரைச் சுத்தி செய்வதற்கான வசதி கொண்ட முறையே இறால் குஞ்சு வளர்ப்பில் மிகப் பயனுறுதி கொண்டதாகக் காணப்பட்டது. பண்ணைப் பெறுபேறுகளைப் பொறுத்தமட்டில் வளர்ச்சி உற்பத்தி மற்றும் உணவை மாற்றி கொள்ளும் விகிதம் என்பன சுத்திகரிக்கும் முறைகளுடன் இயங்கும் பண்ணைகளின் குறிப்பிடத்தக்களவு உயர்வாக இருந்தது காணப்பட்டது. பல பாரதூரமான கட்டுப்பாட்டுத் தரப் பாதிப்பு அம்சங்கள் அறுவடை செய்த இறால் குஞ்சுகளில் இனங்காணப்பட்டது.

இறால் குஞ்சுகளின் சுகாதார நிலையில் நீர் முகாமைத்துவ முறைமை ஏதேனும் விளைவை ஏற்படுத்துகின்றதாவென மதிப்பிடுவதற்கெனப் பல்வேறு விதமான நீர் முகாமைத்துவ முறைமைகளை நடைமுறைகளை ஆதாரமாகக் கொண்ட மூன்று இறால் குஞ்சுப் பண்ணைகள் தெரிவு செய்யப்பட்டன.

1977 ஆகஸ்து தொடக்கம் 1998 ஒத்தோபர் வரை இரண்டு வாரங்களுக்கொருமுறை வளர்ந்து செல்லும் இறால் குஞ்சுகளின் சுகர்தார நிலைமையையும் நீரின் தரத்தையும் கண்காணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தேவைக்கென ஒவ்வொரு பண்ணையிலுமிருந்து 5 வளர்ப்புக் குட்டைகள் தெரிவு செய்யப்பட்டன. மாதிரிகள் தெரிவு செய்யும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குட்டையிலும் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் பிசிஆரை உபயோகித்து எஸ். இ.எம்.பீ.வி.க் கென மதுசாரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதற்கென 70% த்தில் பாதுகாத்து வைக்கப்பட்டன. அதற்கு மேலாக அவற்றில் தெரிவு செய்யப்பட்ட பண்ணைகளில் குஞ்சு பொரி கட்டத்தில் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. பி.சி.ஆர் ஆய்வுகூடம் ஒன்று தாபிக்கப்பட்டது.

நிகழ்ச்சித் திட்டம்: 2

தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நன்னீர் அலங்கார மீன்வளங்கள் மதிப்பிடலும் அடைத்து வைத்து இனப்பெருக்கம் செய்வதற்கான உள்ளூர் மீன் இனம் ஒன்றை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அநேக இடங்களில் பாரிய அளவில் பிடிக்கப்பட்ட மீன் மாதிரிகளில் கூடுதலாக டானியோமலாபறிக்கஸ் இருந்தது, அவதானிக்கப்பட்டது. அவதானிக்கப்பட்ட போக்கு என்னவெனில் டி மலா பறிக்குஸ் மற்றும் பி விற்றாட்டுஸ் இனங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது அவதானிக்கப்பட்டது. டனியோபதிரண என்ற காட்டு இனம் ஒன்று படிப்படியாக அதிகரித்து வந்தது அவதானிக்கப்பட்டது.

செந்நிறம் கொண்ட புண்ரியஸ் றிற்றெயா ஒன்று அல்லது இரண்டு இடங்களில் மட்டுமே காணப்பட்டதுடன் அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு எண்ணிக்கையாகவும் இருந்தது. எந்தவொரு குறிப்பிட்ட இடத்திலும் பி. திக்குறோபஸ்ஸியாட்டுஸின் எண்ணிக்கையில் காலப்போக்கில் வீழ்ச்சி காணப்பட்டது. ஆவணப்படுத்திய இடங்களுக்கு ஒழுங்காகச் சென்று வந்ததன் பின்பு தானும் பி. அசோகா வர்க்கத்தில் மிகச் சொற்பமானவையே அவதானிக்கப்பட்டன.

ஓடைகள் ஆரம்ப காலத்துடன் ஒப்பிடுமிடத்து மணல் மேடுகள் நிறைந்தவையாகவும் சேற்றுத் தன்மைகள் கொண்டவையாகவும் மேலும் மேலும் மாற்றமடைந்தன.

இச்சுற்றாடல் செழிப்பின் பெறுமானத்தையும் எதிர்காலச் சந்ததியினருக்கென அவற்றைப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் கிராமங்களுக்கு நாறாவின் உத்தியோகத்தர்கள் அறிவூட்டினர். கிராம மட்டத்தில் இந்த வளங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கெடுத்துக் கொள்வதற்கான தமது விருப்பத்தை அநேகர் வெளிக்காட்டினர்.

பி. றிற்றேயா, பி. நிக்குறோஸ்வஸ்சியாட்டுஸ், பி. குமிங்கி, பி. பந்துலா, பி. பிமாடுலான்றுஸ், டானியோ பதிரண, பெலொன்னிசியா, சிக்நாட்டா மற்றும் மல்புளுட்டா கிறெற்செறி என்பனவற்றை வளர்ப்பது பற்றியதான பரிசோதனைகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

இரஸ்போறவற்றெறிபுளோரிஸ் மிகவும் எளிதில் பாதிப்புக்குட்படக் கூடியதாய் இருந்தது. வெளிவந்தவுடன் நீண்ட நேரம் போக்குவரத்தைத் தாங்கக் கூடியதாக இருக்கவில்லை என்பதும் தெரியவந்தது.

தென் மாகாணத்தில் பொருளியல் மற்றும் சமூகவியல் அம்சங்களுக்கு விசேட மதிப்பளித்து சிறிய உள்ளூர் நீர்நிலைகளில் அலங்கார மீன் வளர்ப்பில் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

இக்காலம் வரை சேகரிக்கப்பட்ட நீரில் தரத்திலான விசேட குணாதிசயங்களின்படி தெரிவு செய்யப்பட்ட இந்நீர் நிலைகள் மீன் வளர்ப்பதற்குப் பொருத்தமானவையாக உள்ளன.

மீன் குஞ்சுகள், உணவு மீன், மற்றும் அலங்கார மீன்கள் வளர்ப்பு மட்டில் விசேட கவனம் செலுத்தி றைஸ் மீன் வளர்க்கும் முறை நடாத்தப்பட்டது.

ஆய்வு நடாத்தப்பட்ட பிரதேசம் இரத்தினபுரியில் உள்ள துன்கம ஆகும். நீர்ப்பாய்ச்சல் கால்வாய்க்கு அணித்தாய் அமைந்துள்ள வயல்கள் தெரிவு செய்யப்பட்டன. தயாரிக்கப்பட்ட வயல்களில் திலப்பியா இனப்பெருக்கு மூலங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இவற்றுக்கு அரிசித் தவிடு (உள்ளூரில் கிடைக்கும் உணவு) உணவாக வழங்கப்பட்டது. 5% பீ. டபிள்யூ. சேகரித்த திலப்பியா மீன்குஞ்சுத் திரள் ஒரு ஆய்வுவயல் பிரதேசத்திலிருந்து சேகரிக்கப்பட்டு துங்கம வேவா (ஒரு பருவகால வாவி) யில் வைக்கப்பட்டன.

980 திலப்பியா மீன்குஞ்சுத் திரள்களை உற்பத்தி செய்வதன் மூலம் ஒரு நெல் வயலில் இருந்து ஒரு பருவகாலத்துள் விவசாயி ரூ. 490/- ஐ சம்பாதித்தார்.

திலப்பியா மீன்குஞ்சுத் திரள்களை (இயற்கையாக உருவாகும் மீன்) நெல்வயல்களில் உற்பத்தி செய்யும் முறை உலர் வலயத்திலுள்ள மீன் உற்பத்தியாளர்களிடையே அறிமுகம் செய்யப்படலாம்.

நிகழ்ச்சித் திட்டம்: 3 நீரியல்வள அபிவிருத்தியும் உள்ளூர் மீன்பிடி முகாமைத்துவமும்

மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கெனப் பருவகாலக் குளங்களின் இயல்வள உற்பத்தி ஆற்றல் மதிப்பீடு செய்யப்பட்டது.

குளங்களில் மீன் உற்பத்தி குளோரோபில் சேர்மம் மற்றும் உப்புத்தன்மை போன்ற லிமோ லொஜிகல் விசேட குணாதிசயங்களால் மிக முக்கியமாகக் கட்டுப்படுத்தப்படுவதாக தரவுப் பகுப்பாய்வின் விளைவுகள் காட்டின. மீனவர்களை ஒழுங்கமைப்பதற்கான வளர்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதன் பின்பு சட்ட விரோதமான மீன்பிடிக்கும் முறைகள் குறைந்துவரும் போக்கு இருப்பது தெரியவந்தது.

நிகழ்ச்சித் திட்டம்: 4 கடல் வேளாண்மை

சமூக ஆதாரமாகக் கொண்ட சிப்பி வளர்க்கும் முறைமை ஊக்குவிக்கப்பட்டது.

மொறட்டுவை முகத்துவாரத்துக்கு தெப்ப முறையே பொருத்தமானது எனக் காணப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட பிரதேசத்தில் இயற்கை இயக்குநர் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளார். இந்தத் திரவத்தன்மை மீனவ குடும்பங்களின் வருமான மட்டங்களை மேம்படுத்துவதுடன் சமூக நன்மைகளையும் மேம்படுத்தும்.

தெரிவு செய்யப்பட்ட உவர் நீர்:

மீன் வளர்ப்பில் மரபு முறை உணவுகளின் செலவுப் பயனுறுதி நாடப்பட்டது.

4 மாதங்கள் வரை அரிசித் தவிட்டை உண்ட சானொஸ் சானோஸ் வர்க்கத்தில் கணிசமான அளவு உயிர்வாழ்ந்தது. ஆனால் வள்ர்ச்சி வீதம் மெதுவாக இடம்பெற்றது. மீன்கள் இக்காலப் பகுதியினுள் சந்தைப்படுத்தக் கூடிய அளவிற்கு வளர்ச்சி அடையவில்லை. வளர்ச்சி வேகம் மெதுவாக இடம்பெற்றதற்கான காரணம் புதிதாக அமைக்கப்பட்ட கால்வாய்களில் அதிகரித்த அமிலம் கலந்திருந்ததன் (பி.எச். அளவு - 4-5) காரணத்தினாலாகும்.

லேற்றெஸ் கல்கறிப்பரிலான பரிசோதனை இன்னமும் நடைபெறுகின்றது. இன்று வரை பெற்ற பெறுபேறுகளின்படி மீன்குஞ்சுகளின் உயிர் வாழ்தல் மற்றும் வளர்ச்சி என்பன நன்றாக உள்ளது.

நீர்கொழும்பு வாவியில் உள்ள வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த மீன் இனங்களின் உணவு உட்கொள்ளும் முறை ஆராயப்பட்டது.

மூன்று மணி நேர இடைவேளையில் இரண்டு பகல் நேர இடைவெளிகள் அளவீடுகள் மீன்களால் உண்ணப்பட்ட உணவு விடயங்களை அறியும் பொருட்டு இன ரீதியில் குடல்களில் இருந்து உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நீள விரிவுத் தரவும் மாதாந்தம் சேகரிக்கப்பட்டது.

பிடித்து வைத்து வளர்க்கப்படும் சேற்று நண்டுகளை கொழுக்க வைப்பதிலான பொருளியல் சாத்தியத்தை தீர்மானிப்பதற்கும் புழுக்களை வளர்ப்பதற்கான தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்குமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

நண்டின் வளர்ச்சி மேற்பரப்பில் இடம்பெறுமிடத்து அதன் தாக்கம் பற்றிய பரிசோதனையை நடாத்துவதற்கென (2 மீ 2 மீ 0.75 மீ) அளவிலான மூன்று கூடுகள் அமைக்கப்பட்டன. இளம் நண்டுகள் இல்லாததன் காரணத்தால் பரிசோதனைகள் தாமதமாகின.

நண்டு பொரிக்கும் இடங்கள் அமைப்பது ஆரம்பிக்கப்பட்டது ஆயினும், வடிவமைப்பில் ஒரு வழு இருந்ததன் காரணத்தால் இது நிறுத்தப்பட்டது. ஆகவே, 1999ம் ஆண்டில் நண்டு வளர்ப்பதிலான பரிசோதனைகள் எவையும் இடம்பெறவில்லை.

ஆர். ஆர். சி. - கல்பிட்டியில் கடல் கெக்கரி வளர்க்கும் தொட்டிகள் நடாத்தப்பட்டன. அனவ் ஊக்குவிப்பின் மூலமான தொழிநுட்பத்தை உபயோகித்து எச். ஸ்கப்றா, மற்றும் எச். அற்றா முட்டைகளைக் கொண்டு பரீட்சார்த்த இனப்பெருக்கம் செய்யப்பட்டது. பூஞ்சணை நோயின் தாக்கத்திற்குட்பட்டு மிருகங்கள் இறக்க நேரிட்டதன் காரணமாக முட்டைத் தொகுதிகளை சில நாட்களாவது வைத்திருப்பது இக்கட்டான விடயமாக இருந்தது. றெப்லோன் போன்ற சக்தி வாய்ந்த பூஞ்சணைக் கொல்லிகள் மூலம் இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கென வெளிநாட்டிலிருந்து அதனைத் தருவிப்பதற்கான கட்டளைகள் அனுப்பப்பட்டுள்ளன.

நிகழ்ச்சித் திட்டம்: 5 கடற்றாழை மற்றும் ஈரலிப்பு நில முகாமைத்துவம்

இரண்டாவது படி உற்பத்திக்கான (மீன்பிடித்துறை) கடற்றாழை மற்றும் கடற்புல் சூழல் முறைகளின் பங்களிப்புப் பற்றி நீர்கொழும்பு வாவியில் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டது.

நீர்கொழும்பு வாவியில் இருந்து ஆறு கடற்புல்லின மற்றும் 5 மக்குறோ அல்கே இனங்கள் கடற்புல்லின வழிகாட்டல்களில் இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஹலோபிலா பினிபொலியா முனைப்புள்ள இனமாக இருந்த அதே வேளை ஆய்வு காலத்தின் போது சிறிங்கோடியம் இனம் மிக அரிதாகக் காணப்பட்ட இனம் ஆகும்.

நண்டு மற்றும் சிப்பி இனங்கள் பிரதான தொகுதிகளாகக் காணப்பட்டதுடன் இவை கடற்றாழை உள்ள பிரதேசங்களில் வாழும் அதே வேளை சிப்பி இனங்கள் அதிகமாகக் கடலிலும் புல்மேடுகளிலும் அதிகமாகக் காணப்பட்டன.

இலங்கையிலுள்ள நீர்த் தேக்கங்களில் மீன் உற்பத்தியை உயர்த்துவதற்கு வேண்டிய முகாமைத்துவ உபாயங்களை அபிவிருத்தி செய்தல். இலங்கையில் உள்ள அநேகமான நீர்த் தேக்கங்களில் எல். றொஹிற்றா மற்றும் சி காப்பியோ மீன் இனங்களுக்கு புத்துயிர் அளிக்கப்படலாம். கல்டாகல்ட இனத்துக்கு கிறில்பானவேவா போன்றதான குறிப்பிட்ட நீர் நிலைகள் தேவையாயுள்ளன. மனிதனால் செய்யப்பட்ட நீர் உணவுகள் (உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களில் இருந்து தயாரிக்கப்பட்டவை) இறப்பு வீதங்களில் கவனம் செலுத்தி குஞ்சு வளர்ப்பில் உபயோகிக்கப்படலாம்.

ஆய்வரங்கு - வேலைக்களங்கள் பங்கேற்ற / ஒழுங்கு செய்த

1. எம். ஒ. எப். ஏ. டி. யால் ஒழுங்கு செய்யப்பட்ட இலங்கையில் அலங்கார மீன் வளர்ப்பிலான வேலைக்களம் (9.1.1998)
2. உருகுணை மலல வித்தியாலயம் அம்பாந்தோட்டையில் நீரியல் அபிவிருத்தியினாலான ஆய்வரங்கு (10.1.1998)
3. நாறா கேட்போர் கூடத்தில் உள்ளூர் மீன் வளர்த்தல் பற்றியதான வேலைக்களம் (18.2.1998)
4. அலங்கார மீன்களுக்கான நோய்களைக் கட்டுப்படுத்துதல் தொடர்பில் ஒரு வேலைக்களம் ஒழுங்கு செய்யப்பட்டது. எஸ். எல். ஏ. எப். ஏ. ஆர்.
5. 5 ஆவது ஆசிய கடற்றொழில் பொது மன்றத்தில் கலந்து கொண்டது, தாயிலாந்து.
6. எம். ஒ. எப். ஏ. ஆர். டி. யால் ஒழுங்கு செய்யப்பட்ட "கிராமிய அபிவிருத்திக்கான நீர்ப்பண்ணை வளர்ப்பு" என்பதிலான தேசிய வேலைக்களம் - 1998 செப்தெம்பர் 17- 18.
7. பேராதனைப் பல்கலைக்கழகத்தால் 1998 நவம்பர் 26-27 ஒழுங்கு செய்யப்பட்ட "நீர்ப்பாசன முறைமைகள் தொழிநுட்பவியலியல் மீன்" என்பதிலான வேலைக்களம்.

8. இலங்கையில் ஆதாரம் கொண்டதான இறால் குஞ்சு வேளாண்மையிலான தேசிய வேலைக்களம் – பிரச்சனைகளும் சவால்களும் – 1998 மார்ச்சு 26–27 எம்.எப்.ஏ.ஆர்.டி. மற்றும் எப்.ஏ.ஒ. வால் ஒழுங்கு செய்யப்பட்டது.
9. இலங்கையின் கடல் வளங்கள் பற்றிய ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பேணலிலான வேலைக்களம்: 1998 ஒக். 15.
10. அலங்கார மீன் ஏற்றுமதி தொடர்பில் நல்ல முகாமைத்துவ ஒழுங்கு முறைகளும் தொற்று நோய்த் தடுப்பு முறைகளிலுமான வேலைக்களம் – நாறா 10.07.1998.

விசாலிப்பு வேலை:-

1. காலி, மாத்தறை, மற்றும், அம்பாந்தோட்டை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட மீன் பிடிக் குடும்பங்களுக்கு இலங்கையில் இரு தோட்டுச் சிப்பி மற்றும் நன்னீர் இறால் வளர்ப்பு பற்றியதான ஒரு விரிவுரை.
2. வென்னப்புவை மற்றும் சிலாபம் பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு இலங்கையில் "இறால் வேளாண்மை" என்பதிலான விரிவுரை.
3. கம்பளை மற்றும் பேராதனைப் பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இலங்கையில் "நீர்ப்பண்ணை வளர்ப்பு ஒழுங்கு முறைகள்" என்பதிலான விரிவுரை.
4. சந்திரிக்காவெவ, கிறில்பன்வேவா, உடவளவவேவா, முத்துக்கண்டியவேவா வைச் சார்ந்த கடற்றொழில் சங்கங்களில் நான்கு அங்கத்தவர்களுடன் கூடு பற்றிய அறிவு ஊணவளித்தல் மற்றும் கூடுகள் வைத்தல் பற்றி நடாத்தப்பட்ட வேலை.
5. "மின்விசித்துறு வர்த்தகச் சந்தை 98" ஒழுங்கமைப்புக்குழு அங்கத்தவர்கள் 1998 சனவரி 9–11 வரை ப. ஞா. ச. மா. ம. தில் நடாத்தப்பட்டது.
6. எஸ். எல். ஏ. எப். ஏ. எஆர். மற்றும் நாறா ஆகியவை கூட்டாக ஒழுங்கு செய்த "இலங்கை நாட்டின் மீன்கள் வளர்த்தல்" என்னும் வேலைக்களத்தில் ஒழுங்கமைப்புக் குழுவில் ஒரு அங்கத்தவரும் ஆற்றல்வளரும் நாறாவில் 18.02.1998.
7. "இலங்கையில் அலங்கார மீன் கைத்தொழிலில் இன்றைய நிலைமை" என்னும் தலைப்பில் 09.02.1998 அன்று ப. ஞா. ச. மா. ம. தில் நடைபெற்ற அலங்கார மீன் கைத்தொழில் பற்றியதான ஆய்வரங்கில் ஒரு சொற்பொழிவு.
8. "அலங்கார மீன். இனப் பெருக்கம் வளர்ப்பு மற்றும் பேணல்" பற்றி நாறாவில் நிகழ்த்தப்பட்ட ஒரு மாதப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.
9. 5.03.1998 அன்று நாறாவில் "அவுஸ்திரேலியாவில் கூட்டில் மீன் வளர்ப்பு" பற்றி டாக்டர் ஜியோப் கூலே ஆற்றிய சொற்பொழிவில் பங்கேற்பு.
10. 1998 மார்ச் 24–25 இல் நீர்கொழும்பில் எப். எ. ஒ. / பீ. ஒ. பீ. பி. ஆகியவற்றால் ஒழுங்கு செய்யப்பட்ட "மீன்பிடி முகாமைத்துவம்" வேலைக்களம்.
11. நாறாவால் நடாத்தப்பட்ட "அலங்கார மீன் இனப்பெருக்கம், வளர்ப்பு, மற்றும் பேணல்" பற்றியதான இரண்டு (ஒரு நாள்) பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.
12. எஸ். எல். ஏ. எப். ஏ. ஆர். இன் இணைச் செயலாளர் என்ற கோதாவில் "இலங்கையில் உள்ளூர் மற்றும் நாட்டின் நன்னீர் மீன்களைப் பாதுகாத்தல்" பற்றிய கண்டியில் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி. நிகழ்ச்சித் திட்டம் 1998 யூனில் ஒழுங்கு செய்யப்பட்டது.
13. எஸ். எல். ஏ. எப். ஏ. ஆர். இன் 1998 க்கான ஆண்டு விஞ்ஞான அமர்வுகள்.
14. நாறாவில் அலங்கார மீன் இனப்பெருக்கம் வளர்ப்பு மற்றும் பேணல் பற்றி நடாத்தப்பட்ட இரண்டு (ஒரு நாள்) பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.

15. எஸ். எல். ஏ. எப். ஏ. எஆர். இன் இணைச் செயலாளர் என்ற கோதாவில் "இலங்கையில் உள்ளூர் மற்றும் நாட்டின் நன்னீர் மீன்களைப் பாதுகாத்தல் பற்றி கண்டியில் பாடசாலை மாணவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட விழிப்புணர்ச்சித் திட்டம்.

16. மஹியங்கனையில் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்ச்சித் திட்டம்.

17. அம்பாந்தோட்டை மாகாணத்தில் அலங்கார மீன் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தாபிப்பதற்கான ஒழுங்கு செய்வதற்கான எம். ஒ. எப். ஏ. ஆர். இல் நடாத்தப்பட்ட கூட்டம்.

18. நாறாவில் வெப்பவலய மீன் ஏற்றுமதியாளர்களுக்கான கூட்டம்.

19. அம்பாந்தோட்டையில் சமுர்த்தி நிலையத்தில் கூட்டம். 09.10.1998.

20. 28.01.1998 அன்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் உயிரியல் விசேட மாணவர்களுக்கு நீரியல் பண்ணைவளர்ப்பில் மீன் உணவுகள் மற்றும் என்னும் தலைப்பில் விரிவுரைகளும் ஒரு செயல்முறை வகுப்பும் நடாத்தப்பட்டது.

21. அளுபொத்தவட்ட, ஹன்வெலவில் உத்தேச சுகாதார காணி நிரப்புவதற்கான இ. ஐ. ஏ. மதிப்பீட்டுக்கான தொழில்நுட்பக் குழுவில் சேவையாற்றியது.

22. நரேசாவின் நிதி உதவியுடன் அலங்கார மீன்களிலான ஆணை பெற்ற ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பாளர்.

23. மீகொடையில் 21.02.1998 ஆன்று சர்வோதய கிராமியத் தொழில் முயற்சிகள் அபிவிருத்திச் சேவைகளால் ஒழுங்கு செய்யப்பட்ட அலங்கார மீன் கிளினிக்கின் ஆதாரம் வழங்குனராயிருந்தார்.

24. அம்பாந்தோட்டை தொழில் முயற்சி அபிவிருத்தி நிலையத்துக்கான அலங்கார மீன் வளர்ப்புக்குப் பொருத்தமான இடம் பற்றிய ஆய்வுக்கென படகிரியா/அம்பாந்தோட்டையில் இட அளவீடு. 06.03.1998.

25. புனித அலோசியஸ் கல்லூரி இரத்தினபுரியில் 10.10.1998 அன்று அலங்கார மீன் கைத்தொழிலில் நடாத்தப்பட்ட விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஆதாரம் வழங்குனர்.

26. தேசிய கடற்றொழில் பயிற்சி நிறுவனம்/எம்.ஒ.எப்.ஏ.ஆர்.டி யாலும் 1998 நவம்பரில் நீரியல் பண்ணைக்காரர்களுக்கும் மீனவர்களுக்கும் அலங்கார மீன் வளர்த்தலிலான பயிற்சி நெறிக்கான ஆதாரம் வழங்குநர்.

27. "தொட்டில்களில் மீன் வளர்க்கும் கைத்தொழிலில் மிகு வளர்ச்சி முறைமைகள்" சிலாபத்து சமுர்த்தி இயக்க மிகு வளர்ச்சி உதவியாளர்களால் 30.11.1998 இல் ஒழுங்கு செய்யப்பட்ட விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டம்.

28. 1998 சனவரி 9 ஆம் திகதி நடாத்தப்பட்ட "அலங்கார மீன் வளர்ப்பு" பற்றியதான ஆய்வரங்கு.

29. 1998 பெப்ருவரி 18 ஆம் திகதி நாறாவில் நடாத்தப்பட்ட "சுதேச மீன் இனப்பெருக்கம்" பற்றியதான வேலைக்களம்.

30. கீழே குறிப்பிட்டுள்ள இரண்டு கைநூல்களும் எழுதப்பட்டுள்ளன.

31. "கடலட்டை கடற்றொழிலுக்கான ஒரு கைநூல்" இக்கைநூல் இந்த இனத்தை இனங்கண்டு கொள்வதற்கு மீனவர்களுக்கு உதவுவதுடன் பதனிடுவோருக்கு பல்வேறு பதனிடு முறைகளையும் கொண்டு உதவும் நோக்கைக் கொண்டுள்ளதாகும்.

32. கடலட்டைக் கடற்றொழிலின் சமூக பொருளியல் நிலை.

33. இரண்டு தொகுதியினரைக் கொண்ட மீனவர்களுக்கு 8 இனங்களை பதனிடும் முறைகள் செய்து காட்டப்பட்டன. ஒரு தொகுதியினர் கந்தக்குழியா மீனவர் கூட்டுறவுச் சங்கத்தையும் மற்றவர்கள் தொட்டுவாவவையும் சேர்ந்தவர்களாகும்.

34. ஆர். ஆர். சி. கப்பற்தோட்டையில் 1998 சன. 01 தொடக்கம் இன்று வரையான நிருவாக வேலைகள்.

35. நாறாவில் 1998 ஆகத்து 4-5 திகதிகளில் அலங்கார மீன் இனப்பெருக்கம் செய்தல் மற்றும் முகாமைத்துவப் பாடநெறியிலான செயல்முறை வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

36. 1998 ஒக்டோபர் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் ஆர். ஆர். சி. கடோல்கெலேயில் நன்னீர் மீன் இனங்களை இனம் காணுதல். பிரதான ஒழுங்கமைத்தலிலான வேலைகள் செய்து முடிக்கப்பட்டன.

37. ஆர். ஆர். சி. கப்பற்தோட்டையில் 1998 சனவரி 01 தொடக்கம் இன்று வரையான நிருவாக வேலைகள்.

38. எப். ஏ. ஓ. ஆதரவின் கீழ் ரி/சி/பி/எஸ். ஆர். எல்./6614 இறால் குஞ்சு வளர்ப்போருக்கான விழிப்புணர்ச்சித் திட்டம்.

வெளியீடுகள்:-

பின்வரும் விஞ்ஞானத் தொடர்பிணைப்பு மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்திலான ஆராய்ச்சிக் காண்புகளை விளக்கமாக விவரிக்கின்றது.

ஆரியவன்ச, கே. டபிள்யூ. எஸ். ஜயசிங்கா, ஜெ. எம். பி. கே. மற்றும் ஹெட்டியாராச்சி கே. (1998) வெண்புள்ளிகள் எப்பிசூட்டிக் நோயில் பாதிக்கப்பட்ட இறால்குஞ்சு வளர்ப்பு முறைமைகளில் பக்ரீறியாக் கண்ணோட்டம் இலங்கை விலங்கு வளர்ப்பு சங்கம்.

திசாநாயக்கா, பி. எஸ். சி., ஜெயசிங்கா, ஜெ. எம். பி., கே. மற்றும் எதிரிசிங்கா யு. (1998) ஓரளவு மூடப்பட்ட மற்றும் பூரண நீர் மின் சுற்றோட்ட முகாமைத்துவ முறைமைகள் இறால் குஞ்சு நிருவாகத்தில் வகிக்கும் செல்வாக்கும் அரை ஊக்கும் கொண்ட இறால் குஞ்சு வளர்ப்பில் பண்ணைச் செயல் நிறைவேற்றமும். இலங்கை விலங்கு வளர்ப்புச் சங்கத்தின் 1 ஆம் ஆண்டு அமர்வுகள்.

நாராயணா என். எம். என். கே. மற்றும் ஜயசிங்கா ஜெ. எம். பி. கே. மற்றும் எதிரிசிங்கா யு. (1998) இறால் குஞ்சுப் பண்ணை நடாத்தும் முறைகளில், பக்ரீறியா பார்வையை மதிப்பிடுதலும், இறால் குஞ்சுச் சுகாதாரத்தில் புறேபையோரிக் “எப்பிசின்” உபயோகிப்பதன் மூலமான தாக்கமும் பண்ணைச் செயல் விளையும் இலங்கை கால்நடை உற்பத்திச் சங்க 1 ஆம் ஆண்டு நிகழ்வுகள்.

கொறையா ஏ. எஸ். எல். இ. மற்றும் ஜயசிங்கா ஜெ. எம். பி. கே. (1998) இலங்கையில் வளர்க்கப்பட்ட இறால் குஞ்சுகளின் (பினெயுஸ் மொனடொன்) வளர்ச்சியில் உப்புத் தன்மை கொண்டுள்ள தாக்கமும் வெண்புள்ளி நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஆபத்தும். 5 ஆவது ஆசிய கடற்றொழில் பொதுமன்றம், சியாங்மாயி, தாய்லாந்து.

கெ. றெயாவும் மறுபேரும் (1998) சுயமாசடைதல்: இலங்கையில் இறால் பண்ணைக் கைத்தொழிலுக்கு ஒரு பாரிய அச்சுறுத்தல் அம்பியோ தொகுதி 27:662-668.

இலங்கை காலியிலுள்ள றம்மசாலா விரிகுடாவில் பேர்ணாயேர்ணா, மண்ணிற மசலின் வள்ளப் பண்பாடு.

எம். எச். ஹேவவிதாரண, டபிள்யூ. எம். ரி. பி. வன்னிநாயக்க, மற்றும் யு. எதிரிசிங்காவும் 1998 இலங்கை இறால் குஞ்சுப் பண்ணைகளின் வெளியே போகும் நீரிலும் திறந்த உவர் நீரிலும் குளோறொபில் திரட்சித் தட்டை சிப்பிகளில் கிறசொஸ்றியா மட்டாசெனிஸ் இல் குறைந்து காணப்பட்டது. 1998 யூன் 23-24 எஸ். எல். ஏ. எப். ஏ. ஆர். வருடாந்த விஞ்ஞான அமர்வு, கொழும்பு, இலங்கை.

டபிள்யூ. எம். ரி. பீ. வன்னிநாயக்கா, எம். எச். ஹேவவிதாரண, ஜெ. எம். பி. கே. ஜயசிங்கா மற்றும் யு. எதிரிசிங்கா 1998. இலங்கையில் ஓரளவு ஊக்கம் கொண்ட இறால் குஞ்சு முறைமைகளில் வெளிபோகும் நீரில் தொங்கு திண்மத் திரட்சி, மற்றும் குறோறோபில் திரளுதலைக் கட்டுப்படுத்துதலின் சிப்பி, கிறிசொஸ்றியா, மட்றாசென்சிஸ் 5 ஆவது ஆசிய கடற்றொழில் பொது மன்றம் நவம்பர் 11-14, 1998 சியான்மாய், தாயிலாந்து.

டபிள்யூ. எம். பி. ரி. பி. வன்னிநாயக்கா, 1998 பச்சை சிப்பி பெமாவிறிதிஸ் என்பவற்றிலான வளர்ப்புப் பரிசோதனை, புத்தளம் வாவி, இலங்கை.

1998 ஜனவரியில் இடம்பெற்ற "மின் விசித்துறு வர்த்தகக் கண்காட்சி 98" வெளியிட்ட ஞாபகார்த்த மலரில் "அலங்கார மீன் கைத்தொழிலை அபிவிருத்தி அடையச் செய்தல்" பற்றியுதான இரண்டு கட்டுரைகள் (சிங்களம், ஆங்கிலம்).

நாறாவின் தலைவரின் வேண்டுகோளில் 1997 மற்றும் 1998 இல் நாறாவால் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள் பற்றியதான அறிக்கை ஒன்று கௌ. கடற்றொழில் அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. அளுபொத்தவத்தை, ஹன்வெல்லை உத்தேச சுகாதார காணி நிரப்புதலுக்கென இ. ஜ. ஏ. யின் நன்னீர் தாவர விலங்கினங்களிலான துறைசார் மதிப்பீட்டு அறிக்கை.

இ. டி. பீக்கான அலங்கார மீன் வளர்ப்பிலான கைநூல்களுக்கான கையெழுத்துப் பிரதியில் மூன்று அத்தியாயங்கள் பூர்த்தியாக்கப்பட்டன.

இலங்கையின் தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அப்பிரதேச மீன்களை இனங்காணும் கைநூல் உயிரியல் ஒத்தியயாமை ஆற்றல் மேம்படுத்தல் கருத்திட்டம்/பாதுகாப்பு நோக்கி நடை (வரைவு கையளிக்கப்பட்டுள்ளது)

எம். எம். குறுப்புவும் எஸ். யு. கே. ஏக்கரட்ணவும் 1998. நீர் மப்பை மற்றும் உயிரியற் திண்ம உற்பத்திக்கென ஆர். ரேமியா பிரான்சிஸ்கானாவை நீர்க்குட்டைகளில் பரீட்சார்த்தமாக வளர்த்தல். 1998 யூனில் இடம்பெற்ற இலங்கை கடற்றொழில் நீரியல்வளச் சங்கத்தின் நான்காம் ஆண்டு விஞ்ஞான அமர்வுகளின் போது சமர்ப்பிக்கப்பட்டது.

ஆசிய கடற்றொழில் சஞ்சிகைக்கென எபியோஹொஹிற்றா கல்ரா கல்ரா மற்றும் சைபிறினா கார்ப்பியோ குஞ்சுகள் உயிர் வாழ்தல் பற்றியதான ஆராய்ச்சிக் கட்டுரை தயாரிக்கப்படுகின்றது.

இது 5 ஆவது ஆசிய கடற்றொழில் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

"சமூகப் பங்களிப்புடன் நீர்ப்பாய்ச்சல் நெல்வயல்களில் பொது சைபிறினஸ் கார்ப்பியோ குளத்து மீன் குஞ்சு உற்பத்தி" யிலான எஸ். எல். ஏ. ஏ. எஸ். சமர்ப்பணம்.

"நன்னீர் இறால் வளர்த்தல்" என்பதிலான கைநூல் (தயாரிக்கப்படுகின்றது).

இறால்குஞ்சு வளர்த்தலுக்கான சிகிச்சை முறைமைகள்" என்பதிலான ஒரு துண்டுப் பிரசுரம் (தயாரிக்கப்படுகின்றது).

குஞ்சின் பின் புழுக்களை சேர்த்து வைப்பதற்கான ஒரு நீர்நிலையைத் தயாரித்தல் (சிங்களத்தில்).

வளர்க்கப்பட்ட இறால் குஞ்சுகளில் சுகாதாரப் பரிசோதனைகளை எவ்விதம் நடாத்துதல் (சிங்களத்தில்).

இறால் குஞ்சுகளில் மஞ்சள் தலை வைரசு நோய் (சிங்களத்தில்).

மீன்பிடித் தொழிநுட்பவியல் பிரிவு

நிகழ்ச்சித் திட்டம் இயற்கைச் சூழல் மேம்படுத்துதல்.

தலைப்பு:- இலங்கையின் தென்பகுதிக் கடற்கரையோரங்களில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் கசிற்றாசை விரிவுபடுத்துதல்.

இந்தச் செயற்கை கற்பாறைத் தொடர்களுடன் இணைந்து அநேக மீன் இனங்கள் வாழ்வதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பெரு நண்டுகள் அரிதாகவே காணப்பட்டன. சுழியோடுதல் நடவடிக்கைகள் பகல் வேளையில் மட்டும் இடம்பெற்றன. நீரின் அடியிலான இந்த அவதானிப்புக்களில் நாறாவின் உத்தியோகத்தர்களும் அப்பிரதேசத்தின் நண்டு பிடிப்பவர்களும் ஈடுபட்டிருந்தனர்.

கசிற்றாஸ் பற்றியதான சிறிய நிழற்படம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் முன்னேற்றத்தைக் குறிப்பிட்டு எஸ். பி. ஆர். டி. பி. க்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

நிகழ்ச்சித் திட்டம் 2 - பரீட்சார்த்த மீன்பிடி

தூண்டிலில் மீன் பிடிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு தூண்டில் மீன் வளத்தை மதிப்பீடு செய்வதற்கென தங்காலை தொடக்கம் கிரிந்த வரையான கரையோரங்களில் நீருக்கடியில் கிடக்கும் பாறைகளைப் படமாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

அனுபவம் கொண்ட மீனவர் ஒருவரின் உதவியுடன் இவ்விதம் நீருள் கிடந்த 16 பாறைகள் இனம் காணப்பட்டன. இவை அநேகமாக சிறியனவாய் இருந்தன. இவை மணல்மேடுகளில் மறைந்து காணப்பட்டன. அவற்றின் உயரம் 0.5 மீ தொடக்கம் 0.3 மீற்றர் அளவானதாய் இருந்ததுடன் அநேகமானவற்றின் சராசரி உயரம் 01 மீற்றராயிருந்தது.

இக்கற்பாறைகள் கடற்கரையோரமாக அமைந்திருந்ததுடன். எல்லாக் கற்பாறைகளும் குறிப்பிடத்தக்க அடையாளங்களுடன் அமைந்திருந்தன.

நீரின் அடியில் காணப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட இந்தக் கற்பாறைகளில் மார்ச்சு தொடக்கம் மே வரையிலான காலப்பகுதியில் அதாவது ரூபகாலத்தில் ரியூனாவுக்கான உயிர்த் தூண்டில் இரை நிறைந்து காணப்பட்டது. இதனை அண்டிய பிரதேசங்களிலும் இந்த ஆய்வை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

தலைப்பு: கிரிந்தவுக்கப்பால் அடி செங்குத்தான் நீள் தூண்டில் மீன் பிடிப் பரிசோதனைகள்.

பீ. வி. எல். எல். மீன்பிடிப் பருவமல்லாத காலத்தில் மட்டுமே இலாபகரமானதென்பது பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது. 100 தூண்டில் முட்கள் கொண்ட ஒரு வள்ளம் நாள் ஒன்றுக்கு மீன் பிடிக்கும் வீதம் 11.8 கி. கி. தொடக்கம் 52.6 கி. கி. வரையானதாக இருந்தது. இவை எல்லாம் டிமேசல் மீன்களையே கொண்டிருந்தது. தூண்டில்கள் அதிகளவில் சிக்கிக் கொள்வதாலும் இழக்கப்படுவதாலும் மீனவர்கள் தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று மாதங்களில் இம்முறையை மேற்கொள்வதையிட்டு திருப்திப்படவில்லை.

பிரசுரங்கள்:-

1. ஒளிவளி மீன்பிடித்தல் மற்றும் வட்டவலை மீன்பிடித்தல் என்பவற்றின் நிலை பற்றி எம். எப். ஏ. ஆர். டி. யின் வேண்டுகோளுக்கிணங்க எம். எப். ஆர். டி க்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.
2. கசிற்றா விரிவாக்கலின் முன்னேற்றம் பற்றி எஸ். பி. ஆர். டி. பிக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

கருத்திட்டவியல் பிரிவு

நிகழ்ச்சித் திட்டம் 1 **இலங்கை கடல் எல்லையில் உள்ள பௌதீக இரசாயனவியல், புவிச்சரிதவியல் மற்றும் உயிரியல் பொதுப் பண்புகளைக் கண்காணித்தல்:**

தலைப்பு- **ஹிக்கடுவை மற்றும் ஹகாவைக் கடற்கரையோரங்களில் மணல் நிரப்புதல் மற்றும் கடல் அரிப்புப் பற்றியதான புலன் விசாரணைகள்.**

ஆய்வு காலத்தின் போது நீரோட்ட வேகம் அளவிடப்பட்டதுடன் மிதவைகளும் 500மீ தொடக்கம் 2000மீ இடைவெளியில் (4 கி. மீ. நீளத்துக்கு) ஹிக்கடுவை மற்றும் ஹகாவை கரையோரம் வரை விரிவாக்கப்பட்டன. காற்றினால் உந்தப்படும் நீரோட்டம் பிரதானமாக தெற்கு நோக்கியதாகவும் வேகம் 20 தொடக்கம் 40 சி. எம்/வினாடி என வேறுபட்டதாகவும் பெறுபேறுகள் மூலம் தெரியவந்தது.

ஆய்வு காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின்படி மேற்சொன்ன கரையோரம் முழுவதும் அவதானிக்கப்பட்ட கடலரிப்பு அல்லது கரையகலமாதல் ஒரு "தற்கா்லிக நிகழ்வு" எனவும் இது பருவப்பெயர்ச்சிக் காற்றின் உயர் வேறுபாட்டுத் தன்மை மற்றும் நீரோட்ட அமைப்பின் காரண மானதெனவும் காணப்பட்டது.

தலைப்பு: தேசிய சமுத்திரவியல் தரவு நிலையத்தைத் தாபித்தல்

உலக சமுத்திரச் சுற்றோட்டப் பரிசோதனை (டபிள்யூ. ஒ. சி. இ.) தாபனத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட சமுத்திரவியல் சார் பிரதான தரவுகள். அநேகமான கப்பல் பிரயாணங்கள் சமுத்திரவியற்பிரிவு உத்தியோகத்தருடன் சேர்ந்து கூட்டாக நடாத்தப்பட்டன.

சேகரிக்கப்பட்ட தரவுகள் தரவு வங்கியில் பேணி வைக்கப்பட்டன.

தலைப்பு:- வெப்பவலய ஆழமற்ற நீர் ஏரிகளை ஆராய்வதும் பகுப்பாய்வு செய்வதும்.

சிறிது காலமே நிலைத்திருக்கக் கூடிய உப்புத் தன்மை கொண்டுள்ள தன்மையை மதிப்பீடு செய்வதற்கெனப் பல்வேறு காலநிலை கொண்ட வலயங்களின் மூன்று கழிமுகமுறைமைகள் தெரிவு செய்யப்பட்டன. புத்தளம், நீர்கொழும்பு மற்றும் சிலாபம் ஏரிகளில் உப்புத் தன்மை பற்றிய மாதாந்த அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த முறைமைகள் காலநிலைக் காரணிகளுக்கு எவ்விதம் அளவுக்கணக்கு எவ்விதமான பயனை விளைவிக்கின்றது போன்ற வானலைகளுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இந்தக் கழிமுகங்களில் காணப்பட்ட உப்புத் தன்மையின் அளவில் உள்ளார்ந்ததும் சிறிது காலம் நிலைத்திருப்பதுமாய் இருந்தது. அதாவது நிலையற்றதும் விசாலமானதுமாகும்.

தலைப்பு:- இலங்கையைச் சுற்றிக் கடல் மட்டத் தரவு சேகரித்தல்.

கடலெழுச்சி அசைவுகள், கடலோர ஏரிகளில் நீர் மாற்றத்தின் நடைமுறை அமைப்பு என்பனவற்றை ஆராய்வதற்கென இரண்டு அளவுசார் எண் மாதிரிகள் அமைக்கப்பட்டன. இந்த மாதிரிகள் புத்தளம், நீர்கொழும்பு மற்றும் சிலாபம் ஏரிகளைப் பொறுத்த மட்டில் நல்ல பலனை விளைவிக்கின்றது. புத்தளத்திலான கடல் எழுச்சி எல்லையில் 70% உராய்வின் காரணமாக வாயில் இருந்து தலைவரை குறைந்து செல்லும் அதே வேளை எஞ்சிய 30% உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் அலைகள் ஒன்றின் மீது மற்றொன்று ஏறுவதன் காரணத்தால் கடல் எழுச்சி அதிகரிக்கின்றது.

சிலாபம் ஏரியில் செய்யப்பட்ட கடல் மட்டத்திலான அளவீடு ஏரிக்கும் கடலுக்கும் இடையிலான நீர் பரிமாற்றம் தெதுறு ஓயாவில் இருந்து வெளியிடப்படும் நீரினால் அதிகளவில் செல்வாக்கைச் செலுத்துகின்றதால் கடல் எழுச்சியின் பாதிப்பு அங்கில்லை.

தலைப்பு: சமுர்த்தி அலை வலு ஆற்றலை மதிப்பீடு செய்தலும் தென் கரையோர சூழலில் பொருத்தமான அலை உபாயங்களையும் இடர்களையும் தெரிவு செய்தல்.

இக்கருத்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டதால் இந்த ஆய்வின் எதுவித இறுதித் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

பிரசுரங்கள்:-

ஆராய்ச்சிக் கட்டுரைகள்

